மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பொதுப் பணித்துறையினருக்குச் சொந்தமான ஆற்றங் கரைகளில் விழுந்த தேக்கு மரம், சிசு மரங்கள் வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இருப்பில் உள்ள மரங்களை ஏலமிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 18–3–87ல் நடந்த ஏலத்தில் தேக்கு கம்பங்கள் மற்றும் சிசு கம்பங்கள் மொத்தம் ரூ. 1,31,962.90-க்கு ஏலமிடப்பட்டு ஏலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குரும்பூர் ஆதி நாராயணப் பெருமாள் திருக்கோயில் திருப்பணி.

109—(*வினா எண் 10668) திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், குரும்பூர் ஆதி நாராயணப் பெருமாள் திருக்கோயில் திருப்பணிக்கு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்திலிருந்து அனுமதிக்கப் பட்டுள்ள தொகை எவ்வளவு?

(ஆ) தொகை வழங்கப்பட்டுவிட்டதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், குரும்பூர் ஆதி நாராயணப்பெருமாள் திருக்கோயில் திருப்பணிக்கு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்திலிருந்து ரூ. 50,000 நிதி மாற்றம் செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

காசங்காடு கால்நடை கிளை நிலையத்திற்கு கட்டிடம்.

110—(*வினா எண் 13560) திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, காசங்காடு கால்நடை கிளை நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?